# உலக ஆயுர்வேத தினம் - 2024

## சுதேச மருத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பீடங்களுக்கிடையேயான பேச்சுப் போட்டி

## கொழும்பு பல்கலைக்கழகம்

### விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

1. தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அல்லது கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீட மாணவர்களுக்கும் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அல்லது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட மாணவர்களும் போட்டியில் பங்குகொள்ளலாம். மேலே உள்ள பீடங்களில் 15.09.2024 ஆம் திகதிக்குள் பதிவு செய்து ஏதேனும் ஒரு கல்வி ஆண்டில் கல்வி கற்கும் எந்த மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

2. போட்டியின் ஆரம்பச் சுற்றுக்கள் பேச்சுக்களின் பதிவு செய்யப்பட்ட வீடியோக்களின் அடிப்படையில் நடத்தப்படும் மற்றும் மதிப்பீடு செய்யப்படும்.

3. இறுதி சுற்றுக்கள் நேரில் (Physically in person) நடத்தப்படும்.

### ஆரம்பச் சுற்றுக்களின் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

i. போட்டியின் ஆரம்பச் சுற்றுக்கள் பேச்சுக்களின் பதிவு செய்யப்பட்ட வீடியோக்களின் அடிப்படையில் நடத்தப்படும் மற்றும் மதிப்பீடு செய்யப்படும். நீங்கள் தங்களுடைய பேச்சுக்களை ஆயுர்வேதம் தொடர்பான எந்த தலைப்பிலும் முன்வைக்கலாம்.

ii. வீடியோவானது உச்சபட்சம் 02 நிமிடங்களாக இருக்க வேண்டும். நிபந்தனைக்கு உட்படாத வீடியோக்கள் இரத்துச் செய்யப்படும்.

iii. வீடியோக்களில் ஒளிப்பதிவு தவிர்ந்த மேலதிக தொழில்நுட்ப பயன்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். மேலதிக ஒலி மற்றும் ஒளி குறியீடுகள் தவிர்க்கப்பட வேண்டும். வீடியோவின் பின்னணியானது வீடியோவின் தரத்தை பாதிக்கக் கூடாது.

iv. போட்டியாளர்கள் பல்கலைக் கழக மாணவர்களுக்கு பொருத்தமான உடையை அணிய வேண்டும்.

v. வீடியோ ஒளிப்பதிவு செய்வதற்கு கைத் தொலைபேசி அல்லது கமராவை உபயோகிக்க வேண்டும் மற்றும் MP4 வடிவில் கிடையாக (landscape) சமர்ப்பிக்கப்பட வேண்டும். (30MB இற்கு மேற்படாமல்)

vi. வீடியோவை சமர்ப்பித்தல்: பூர்த்தியான வீடியோவானது தரப்பட்ட Google form link இற்கூடாக இணைக்கப்பட்டு அத்துடன் போட்டியாளரின் பெயர் மற்றும் மாணவர் பதிவு இலக்கம் குறிக்கப்பட்டு 2024.10.01 (பி.ப 9.00 மணி) இற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

vii. மதிப்பீடானது மொழி புலமை, உடல் மொழி மற்றும் சொல்லாட்சி திறன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

viii. பேச்சின் ஆரம்பம் மற்றும் முடிவானது மதிப்பிடப்பட மாட்டாது. Google form இல் கட்டாயம் பேச்சின் தலைப்பானது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.

ix. போட்டியாளர் ஒரு வீடியோவை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட வீடியோக்கள் சமர்ப்பிக்கப்பட்டால் முதலாவது வீடியோவே கருத்தில் கொள்ளப்படும்.

x. போட்டியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக தயவு செய்து வீடியோக்களை உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்கவும். இறுதித் தினத்திற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் வீடியோக்கள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

xi. முழு போட்டியின் சுற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்படும் வீடியோக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

xii. மொழி மூலம்: சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம். மொழி மூலத்தின் அடிப்படையில் மூன்று தனித்தனி பேச்சுப் போட்டிகள் நடத்தப்படும்.

xiii. முக்கியமான இறுதித் திகதிகள் மற்றும் இணைப்புகள்-

a. விண்ணப்பம் சமர்ப்பிப்பு- 25.09.2024

https://docs.google.com/forms/d/1tbUSRhGM8Nkc7Q_3ulp7mmr2uXy_YmezLDPIcYFyUKU/edit?edit_requested=true

b. வீடியே சமர்ப்பிப்பு- 01.10.2024 ayu.oratory123@gmail.com

மேலதிக தகவல்களுக்கு

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்:

Dr P A S N Silva - 0772653123

Dr M M M Nifras –077 304 8885

Dr SAKCS Senanayake - 0719334584

Dr J S Anusara – 0717958205

Dr S M K S Ranasinghe – 0711342465